**தென்னை பயிர்ச் செய்கைச் சபையின் சேமலாப நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை - 2021, 2022 மற்றும் 2023**

---

தென்னை பயிர்ச் செய்கைச் சபையின் சேமலாப நிதியத்தின் 2021, 2022 மற்றும் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த மூன்று ஆண்டுகளுக்கான செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பான இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியல் அமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியல் அமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு இணங்க பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என நான் கருதுகின்ற நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினரினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(1) உபபிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பான வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) உபபிரிவின் பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பாக வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காட்டக்கூடியவாறு காலப் பகுதியொன்றில் அந்த நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அந்த அதிகார சட்டத்தின் 38(1)(ஈ) உபபிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கபட நேரிடுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன், மேலும் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக உள்ளது.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் மற்றும் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரிவு 27(3) மற்றும் 1973 மே 02 திகதிய தொழில் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த தென்னை பயிரச்செய்கை சபையின் சேமலாப நிதிய யாப்பின் விஷேட ஏற்பாடுகள் அடங்குகின்றன.

## 2.1 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உளமை

நிறுவனத்தினால் இறுதியாக தயாரித்து கணக்காய்வு செய்யப்பட்டிருந்த 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவீனங்கள் தொடர்பாக விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| விடயம் | தொகை ரூபா |
|---|---|
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 568,365,756 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 200,933,068 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **769,298,824** |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | 668,588,942 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 200,000 |
| உரிமை | 100,509,880 |
| **மொத்த உரிமை மற்றும் பொறுப்புகள்** | **769,298,822** |
| மொத்த வருமானம் | 48,328,402 |
| மொத்தச் செலவுகள் | 2,147,464 |
| **மிகை** | **46,180,938** |

## 2.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்கம் கொண்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலங்கங் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.6 இற்கு இணங்க கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2021 மார்ச் இல் முதல் தடவையாக இந்த நிதியத்தில் மோசடியொன்று கண்டறிந்த பின்னர் 2021 இல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி இந்த நிதியம் மத்திய வங்கிக்கு சாட்டுவதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் நிதியத்தின் இறுதிக் கணக்குகள் தயாரித்தல் 2019 முதல் 2021 வரை 2022 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டதுடன், 2021 ஆண்டின் இறுதிக் கணக்குகள் தற்போது அரச கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உரிய தினத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரிவு 27(3) மற்றும் 1973 மே 02 திகதி தொழில் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் சேமலாப நிதிய யாப்பின் பிரிவு 6(II) | அங்கீகரிக்கப்பட்டுள்ள சேமலாப நிதியத்தை நிர்வகிக்கும் யாப்பு அல்லது கட்டளை ஆணையாளரின் எழுத்துமூல அங்கீகரத்துடன் அன்றி மாற்றப்படக்கூடாது எனினும், நிதியத்தின் நிருவாகம் தொடர்பாக, கட்டளையொன்று விதித்திருக்காத ஏதேனும் விடயமொன்று அல்லது பொருள் தொடர்புடைய அனைத்து விடயங்களும் ஆளுகை குழுவின் பெரும்பாண்மை தீர்மானத்திற்கு, தொழில் ஆனையாளரின் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் தழுவு அங்கீகாரம் பெற்றுக்கொண்ட பின்னர் அதன்படி செயற்பட வேண்டியிருந்த போதிலும் மேற்கூறிய அங்கீகாரங்கள் இன்றி 2008 ஜுன் 19 திகதி நடைபெற்று ஆளுகை குழுக் கூட்த்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி அங்கத்தவர்களின் வயது 55 வருடங்கள் பூர்த்தியடைந்த பின்னர் ஒரு தடவையும், அதற்கு 2½ வருடங்களின் பின்னர் அதாவது வயது 57½ வருடத்தை பூர்த்தியடைந்த பினன்ர் மீண்டும் ஒரு தடவையும் ஆக இரண்டு சந்தர்ப்பங்ளில் முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்திருந்தது.<br>2021, 2022 ஆண்டுகளின் போது முறையே ரூபா 2,240,000 தொகை மற்றம் ரூபா 14,780,000 தொகை அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆண்டில் முற்பணம் செலுத்தியிருக்கவில்லை. | 2021 ஆண்டில மோசடி கண்டறியப்படும் வரை இந்த நிதியம் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டுகளிலும் காணப்பட்ட நிருவாகக் குழுக்களின் மூலமே செயற்படுத்தப்பட்டிருந்த து. 2021 நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் பின்னர் அப்போதைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த முற்பண விண்ணப்பங்கள் மற்றும் அப்போதைக்கு 55 வயதை மறறும் 57 வயதை பூர்த்தி செய்திருந்த அங்கத்தவர்களுக்கு மாத்திரம் முற்பணம் விடுவித்தல் 2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் இந்த நிதியத்தை மத்திய வங்கிக்கு சாட்டுவதற்காக பொதுக் கூட்டத்தில் அங்கீகரித்த பின்னர் முற்பணங்கள் மற்றும் கடன் வழங்கல்கள் நிறுத்தப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் குறிப்பிட்ட யாப்புக்கு இணங்க முற்பணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1973 மே 02 திகதிய தொழில் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த தென்னை பயிரச் செய்கைச் சபையின் சேமலாப நிதிய சட்டத்தின் பிரிவு (i) 28 | அனைத்து பஞ்சாங்க ஆண்டுகளுக்காகவும் தயாரிக்கப்பட வேண்டிய நிதியத்தின் கணக்குகள், தொழில் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அனைத்து 12 மாதங்களுக்கு ஒரு முறை வீதம் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 2023 ஆண்டு வரை நிதியத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்யும் நிறுவனத்தை நியமனம் செய்வதற்காக தொழில் ஆணையாளரிடம் அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | 2019 ஆண்டு முதல் தொடர்ந்து கணக்காய்வு அலுவல்கள் அரச கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால மேற்கொள்ளப்படுவதுடன், அதற்காக தொழில் ஆணையாளரின் பெற்றுக்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட காலப்பகுதிக்கான நிதியத்தின் கணக்குகள் தொழில் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பாக அதிகாரிகளக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டில் கண்டறியப்பட்டவாறு நிதியத்தின் செயலாளர் என செயற்பட்ட தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் கணக்காளரினால் நிதியத்தின் அங்கத்தவர் அல்லாத தமது குடும்ப அங்கத்தவர் உட்பட 13 பேருக்கு கடன், பங்களிப்பு முற்பணங்கள் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு என காசோலைகள் மூலம் பணம் செலுத்தியதன் மூலம் 2012 ஆண்டு முதல் மோசடி செய்திருந்த தொகை 2021 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 77,727,691 தொகையாக இருந்தது. மோசடியின் காரணமாக நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை தீர்த்துக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியுடன் குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராக சிவில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 திகதி வரை அவ்வாறான வழங்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், மோசடி ஏற்பட்டிருந்த காலப் பகுதியாகிய 2012 | மோசடி தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக 2021.08.12 திகதி நிதிக் குற்றப் புலனாய்வு பிரிவிற்கு பொது முகாமையாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்த முறைப்பாட்டின் படி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கடுவெல நீதிவான் நிதிமன்றத்தில் விசாரணைகள் தொடர்பான விடயங்கள் அறிவிக்கப்பட்டு பதினொறு பேர்கள் கைது செய்யப்பட்டு காவல் சிறையில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், தற்போது அந்த அனைத்து சந்தேக நபர்களுக்கும் கௌரவ நீதி மன்றத்தினால் பிணை வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட மோசடி தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்குத் தாக்கல் செய்யப்படுவதுடன், | மோசடிக்குரிய அனைத்து தரப்பினருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், மோசடி செய்திருந்த நிதியத்தின் பணத்தை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

முதல் 2021 வரை அதன் நிதியத்தின் கொடுப்பனவு அலுவல்கள் மேற்கொள்வதற்காக காசோலைகளில் இரண்டாவது கையொப்பம் வைத்திருந்த நிதியத்தின் 07 தலைவர்கள் மற்றும் பதில் கடமைகள், விடுவித்தல் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்த 07 பொது முகாமையாளர்கள் தொடர்பாக எதுவித சட்ட நடவடிக்கையும் 2024 ஜூலை 31 திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், மொத்த மோசடியில் ரூபா 15,898,523 தொகை மாத்திரம் 2023 திசெம்பர் 31 திகதி அளவில் அறவீடு செய்யப்பட்டிருந்தது.

கடுவெல மாவட்ட நீதிமன்றத்தில் மற்றும் சிறு உரிமைகள் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.